Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 29 · சனிக்கிழமை Saturday · 29.11.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## 'டித்வா' புயல் எச்சரிக்கை:

# திமுக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்க வேண்டும்

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை:

காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த திமுக நிர்வாகிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் 'டித்வா' புயல் காரணமாக கனமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட தயார் நிலையில் இருக்க வேண்டும்எனதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கடந்த இரண்டு நாட்களாக பேரிடர் மேலாண்மைத்துறைஅமைச்சர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளடன் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வந்த நிலையில் 'டித்வா' புயல் எதிர்கொள்ள அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டுள்ளதோடு, மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது என்றாலும், ஒருவேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக – ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களைத்தயார்நிலையில் இருக்கும்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர்,புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக்கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், பொதுமக்கள் – தன்னார்வலர்களுடன் இணைந்து பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம்.குடிநீர்,பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாகஇருக்கும்.எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச்செய்து தரவும், ஆங்காங்கே நடைபெறும் மீட்பு பணிகளிலும் உதவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தை எதிர்கொள்ளவும் – பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையிலும் கழகம் களத்தில் முழு மூச்சுடன் துணையாக நிற்க வேண்டும் என கட்சியினரை, நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# கோவையில் அவசர கதியில் செம்மொழிப் பூங்கா திறப்பு

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை,

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

25.11.2025 அன்று கோவைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஸ்டாலின் காந்திபுரம், சிறைச்சாலை மைதான வளாகத்தில்ரூ.204கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்த செம்மொழி பூங்காவை பணிகள் முழுமையாக முடிவடையாமல், அவசர கதியில் விளம்பரத்திற்காக திறந்து வைத்துள்ளார். சுமார் 70 சதவீத பணிகள் மட்டுமே முடிவடைந்துள்ளதாக கோவை மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

SEIA Clearance (State Environmental Impact Assessment Clearance from TNPCB) அனுமதி பெறப்படவில்லை.

முடிவடையாத பணிகள் :

30% மரங்கள் நடப்படவில்லை.

செயற்கை புல் தரைகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

முன் நுழைவு வாயில் முகப்பு (Front Entrance Wall)

மாநாட்டு மையம் - தரைத் தளம் (Flooring work)

சுற்றுச் சுவர் (Compound Wall)

கட்டண விளையாட்டு மைதானம் (Pay Play Field)

திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் (Open GYM)

போதுமான கழிப்பிட வசதி போன்றவை ஏற்படுத்தப்படவில்லை.

விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்படவில்லை.

கிரானைட் கற்கள் பதிக்கும் பணிகள் முழுமையடையவில்லை.

கோவை மாநகராட்சியில் பல இடங்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை; ஏற்கெனவே இருக்கும் பூங்காக்கள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை என்று மக்கள் அடுக்கடுக்காக புகார்கள் தெரிவித்தும்; ஏற்கெனவே அளித்த நிர்வாக அனுமதியைக் காட்டிலும் 40 கோடி ரூபாய் கூடுதலாக செலவிட்டும், முழுமை பெறாத இந்தப்பூங்காவை அவசர அவசரமாகத் திறந்தது ஏன் ? மேலும், பல பணிகள் ஒப்பந்தப் புள்ளி கோரப்படாமல், நாமினேஷன் முறையில் விடியா திமுக அரசுக்கு வேண்டிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் செய்திகள் தெரிய வருகிறது.

எனது தலைமையிலான அம்மாவின் அரசு, சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் (ஸ்மார்ட் சிட்டி) கோவை மாநகராட்சிப் பகுதியில் உலகத் தரத்தில் அமைக்கப்பட்ட, கோவை மக்களின் பொழுதுபோக்கு இடங்களாகத் திகழ்ந்த; பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்த பூங்காக்களான உக்கடம்–பெரியகுளம், குறிச்சி குளம், வாலாங்குளம், முத்தண்ணன் குளம், செல்வசிந்தாமணி குளம், குமாரசாமி குளம், கிருஷ்ணாம்பதி குளம் ஆகியவை தற்போது ஆகாயத் தாமரைகள் படர்ந்து, போதிய பராமரிப்பின்றி கேட்பாரற்று உள்ளது.

எங்கள் ஆட்சியில் கட்டப்பட்ட பூங்காக்கள், குளங்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இவைகளை மாநகராட்சி நிர்வாகம் பராமரிக்காமல் உள்ளது.

திமுக அரசு பொறுப்பேற்று 5 ஆண்டுகள் முடிவடைய உள்ள நிலையில், இதுவரை கோவை மாவட்ட மக்களையும்,தொழில்துறையினரின் கோரிக்கைகளையும் திமுக அரசு தொடர்ந்து புறக்கணித்தே வருகிறது. அவற்றில் ஒருசில–

அத்திக்கடவு–அவிநாசி திட்டம் I–ல் விடுபட்ட பகுதிகளை இணைத்து அம்மாவின் அரசு அறிவித்த அத்திக்கடவு–அவிநாசி திட்டம்–IIஐ முதல்–அமைச்சர் ஸ்டாலினின் திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளது.

கோவை மாநகராட்சியால் வெள்ளலூரில் 61.62ஏக்கர்நிலப்பரப்பில் ரூ.168 கோடி மதிப்பில் 'ஒருங்கிணைந்தபேருந்து நிலையம்' அம்மா ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, 50 சதவீத பணிகள் முடிவடைந்த நிலையில் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் திமுக அரசு இப்பணியை கிடப்பில் போட்டுள்ளது.


அதேபோன்று, கோவை மாநகராட்சியில் சுமார் 200 உட்புற சாலைகள் உட்பட முக்கிய அடிப்படைக் கட்டமைப்புகளை சீரமைக்க ரூ. 150 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்ட நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திமுக அரசு பொறுப்பேற்றவுடன் ஒப்பந்தப் புள்ளி ரத்து செய்யப்பட்டது.

கோவை மாவட்டத்தில் முக்கிய சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள் குண்டும்,குழியுமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சாலைகளை சீரமைக்க இந்த அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கோவை மாவட்ட வளர்ச்சிக்கு நாங்கள் திட்டமிட்ட, கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை சரியான முறையில் முன்மொழிவு அனுப்பாத காரணத்தால் இத்திட்டம் மத்திய அரசால் திருப்பி அனுப்பப்பட்டது. அம்மாவின் அரசு கோவை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில் இத்திட்டத்தையும் திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளது.

இப்படி திமுக அரசு, அம்மாவின் அரசு கொண்டு வந்த பல திட்டங்களை கைவிட்டுவிட்டது. இந்நிலையில், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று, அரசு சக்கரத்தை சுழற்றும் குணம் கொண்ட மு.க.ஸ்டாலின், அரைகுறையாக இந்தப் பூங்காவை திறந்து வைத்து கோவை மக்களை ஏமாற்றி வாக்குகளை அறுவடை செய்யலாம் என்று பகல் கனவு காண்கிறார். பொம்மை முதல்–அமைச்சர் ஸ்டாலினின் திமுக அரசிற்கு 2026–ல் நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில், கோவை மாவட்ட மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பது உறுதி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெருங்கும் 'டித்வா' புயல்: செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறைக்கு ரெட் அலர்ட்!



சென்னை: இலங்கை அருகே நிலவி வரும் டித்வாபுயல்,வடதமிழக கடலோரப் பகுதிகளை நாளை நெருங்கி வரக்கூடும். இதன் காரணமாக செங்கல்பட்டு, கடலூர்,விழுப்புரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. வட கடலோர மாவட்டங்களில் மணிக்கு 90 கிமீ வேகத்தில் சூறைக்காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் நிலவிய 'டித்வா' புயல், இலங்கை கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை திரிகோணமலையிலிருந்து தென்மேற்கே சுமார் 40 கிமீ தொலைவிலும், இலங்கை மட்டக்களப்பிலிருந்து வடமேற்கே 100 கிமீ தொலைவிலும், சென்னையிலிருந்து தெற்கே 530 கிமீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது, வடமேற்கு திசையில் நகர்ந்து, இலங்கை கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை கடந்து, 30–ம் தேதி அதிகாலை, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், வட தமிழகம் – புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகே நிலவக்கூடும்.

இதன் காரணமாக வட தமிழகத்தில் நாளை (நவ.29), நாளை மறுநாளும் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், டிச.1 முதல் 4–ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் (நவ.29) டெல்டா மற்றும் அதனை ஒட்டிய கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரை காற்று, அதிகபட்சமாக மணிக்கு 90 கிமீ வேகத்தில் வீசக்கூடும். இதர கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று அதிகபட்சமாக மணிக்கு 75 கிமீ வேகத்தில் வீசக்கூடும்.

மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# வலிமையின் பெருமை

Dr. R. சிவகுமார், IPS.,
Cell:9842126150




இரவு முழுக்க வானத்தில் இருந்தாலும் நிலவுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை.

விண் மீன்களின் கண்ணிய காவலில் நிம்மதியாக இருக்கிறாள். வெண்ணிலா பெண்.

பறந்து கடக்கும் மேகங்கள் அனைத்தும் மென்மையாய் அவளது முகம்பார்த்து வணங்கி மேன்மையாய் செல்கிறது.

பாதைகளில் குழிதோண்டி ஆபத்தை வைத்துவிட்டு கடந்து செல்பவர்களிடம் கவனம் தேவை என கடிந்து கொள்கிறது குழிகளை மூடாது விழிகளை மூடிக்கொண்ட விபரீத சமூகம்.

பேருந்துகள் மீது கல்வீசும் கயவர்களை திட்டமிட்டு பிடிக்காமல்ஒவ்வொரு பேருந்துக்கும் பாதுகாப்பு போடும் பேதமை தொடர்கிறது.

புல்லினங்கள் மேய்வதைத் தடுக்க பூந்தோட்டங்களுக்கு வேலி அமைத்தாற்போல மனிதர்களுக்குமா வேலி வேண்டும் பெண் மலர்களை அழிக்காதீர்கள் என்று ?

பாதுகாப்பாக எப்போதும் இருப்பது எப்படியென பெண் பிள்ளைகளுக்கு பாடம் எடுத்து எடுத்து பாடாய்ப் படுத்துகின்ற பெற்றோர்களும் சமூக உறவுகளும்ஒழுக்கமாய் வாழ்வது எப்படி என்று உருப்படியாக பாடம் புகட்டட்டும் ஆண் பிள்ளைகளுக்கு..

உடலைவெல்வதைவிடஉள்ளத்தை ஆள்வதே உண்மையான ஆண்மை என உணர வைக்க வேண்டும்.

வலிமைக்குப் பெருமை அழிப்பதால் கிடைப்பதில்லை; உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதால் கிடைக்கிறது;

# கோவையில் தமிழ்நாடு தங்க நகை தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் நலச் சங்கம் சார்பாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா

## பெரிய கடைவீதியில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

தமிழக துணை முதல்வரும்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு



துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை தமிழகம் முழுவதும் உள்ள தி.மு.க.கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர்..

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு தங்க நகை தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் நலச்சங்கம்சார்பாககோவையில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது..

பெரியகடை வீதி பகுதியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு தங்க நகை தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் நலச்சங்கத்தின் மாநில தலைவர் கிளாசிக் பூபதி தலைமை வகித்தார்..

மாநில பொது செயலாளர் ரியாசுதீன் முன்னிலை வகித்தார்..

விழாவில் பெரிய கடை வீதி,ஒப்பணக்கார வீதி பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்..

விழாவில் பேசிய சங்கத்தின் மாநில தலைவர் கிளாசிக் பூபதி,கோவை மக்களின் நீண்ட கால கோரிக்கையான தங்க நகை பூங்கா அமைக்கும் பணிகளை துவக்கி உள்ள தமிழக முதல்வருக்கு இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவிப்பதாக கூறினார்..

நிகழ்ச்சியில் தமிழ்நாடு தங்க நகை தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் நலச்சங்கத்தின் நிர்வாகிகள் கோல்டு முஸ்தபா,யாசர்,லைவ் அசார்,அப்சல்,கோல்டு தன்சில் உட்பட மகளிர் அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்..

# தேவேந்திர பேனாக்கள் இயக்கத்தின் விருதுநகர் மாவட்ட செயலாளர்,தலைவரை இயக்க தலைவர் பாலசுந்தரம் அறிவிப்பு

தேவேந்திரபேனாக்கள் இயக்கம் உறவாடி உயர் என்ற உன்னத கொள்கையோடும்,அறிவும் ஆற்ற



லும் இரண்டு கண்கள் என்ற முழக்கத்தோடும் அறிவாயுதம் ஏந்தி நாட்டில் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கவும்,வளமான நாட்டை வளர்த்தெடுக்கவும் பச்சைத் தேவேந்திரர்,வழக்கறிஞர் T.C.பாலசுந்தரம் தலைமையில் சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாக சமூக பணி செய்து வருகிறது.

இந்த இயக்கத்தின் விருதுநகர் மாவட்ட செயலாளர் சரிவர செயல்படாமல் இயக்கத்தின் புதிய விருதுநகர் மாவட்ட செயலாளராக கோட்டைப் பட்டியைச் சேர்ந்த திரு.காசி அவர்களையும், மாவட்ட தலைவராக சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்த திரு. சந்திரமோகன் அவர்களையும் இயக்க தலைமையில் வைத்து 23.11.25.ல் இயக்கத்தின் தலைவர் பச்சைத்தேவேந்திரர்,வழக்கறிஞர் பாலசுந்தரம் பொறுப்புகளை வழங்கினார். பிறகு இயக்க விருதுநகர் மாவட்ட சொயலாளராக காசியும் தலைவராக சந்திரமோகனும் பதவி ஏற்றுக்கொண்டு தலைவருக்கு பொண்ணாடை போற்றி நன்றி தெரிவித்தனர்

# குமாரபாளையத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது



குமாரபாளையம் அருகே வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர்நாச்சிமுத்து, மாணவரணி அமைப்பாளர் உதயகுமார் தலைமையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்விழா கொண்டாடப்பட்டது. ஓலப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணாக்கர்களுக்கு பேனா, பென்சில் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக் ஏற்பாட்டில், தட்டான்குட்டை ஊராட்சி அன்னை ஆதரவற்றோர் மையத்தில் காலை மற்றும் மாலை அன்னதானம் வழங்கப்பட்டது. நிர்வாகிகள் சவுந்திரம், ராஜேந்திரன், ஜான்பீட்டர், விஜயகுமார், முரளி, மாதேஸ்வரன்,உள்பட பலர் பங்கேற்றனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி குமாரபாளையம் நகராட்சி 17வது வார்டு ஏவிபி சந்து, வி எஸ் ஏ சந்து, கத்தாளைபேட்டை, குள்ளப்பா சந்து, சீரங்கன் சந்து ஆகிய பகுதிகளில் வாக்காளர் கணக்கீட்டு படிவம் பெறாதவர்களின் விபரங்களைஅருகில்உள்ளவர்களிடம்முகவரிமாற்றம்செய்துள்ளனர்என்றுகையொப்பம் பெறப்பட்டது.BLO கண்ணன் அவர்கள், சுகுமார், சித்ராபாபு, சண்முகம், சரவணன் ஆகியோர் பணியில் ஈடுபட்டனர்.

# கோவை மாவட்டம் கேரளா எல்லை பகுதியான வேலந்தாவளம் சோதனை சாவடியில் வாகன சோதனையில், ரூ.40 இலட்சம் பணம் பறிமுதல்



கோவை மாவட்ட எல்லை பகுதியான வாலையாறு வழியாக தொடர்ந்து குற்ற சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. இதனை தடுக்க கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தலைமையில் சோதனை சாவடி அமைக்க பட்டு தினசரி வருகின்ற வாகனங்கள் தனிக்கைசெய்ய பட்டு வருகின்றது இதன் ஒரு பகுதியாக இன்று காலை அந்த வழியாக வந்த ஒரு காரை காவல்துறையினர் நிறுத்தி சோதனை செய்தனர் அப்பொழுது அந்தகாரில் சுமார் 40 லட்சம் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நடத்த பட்ட விசாரணையில் கேரளா மாநிலம் பாலக்காடு, வானியம்குளம் பகுதியை சேர்ந்த சுதீர் என்பது தெரியவந்துள்ளது.

மேலும் நடத்த பட்ட விசாரணையில் கேரள மாநிலம் ஒத்தப்பாலம் பகுதியில் உள்ள ஷோபனா ஜிவல்லரி என்ற நகை கடையிலிருந்து பழைய தங்கத்தை கோவை பி.கே. வீதி பகுதிக்கு கொண்டுவந்து அதனை,விற்று பணமாக கேரளா கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார். போலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இவர் கூறிவது உண்மையான தகவலா எனவும், இந்த பணம் ஹவாலா பணமாக இருக்குமா என்ற சந்தேகத்தின் பேரிலும் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். கோவையில் வாகன சோதனையில் ரூபாய் 40 லட்சம் பறிமுதல் செய்ய பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தமிழ்நாட்டில், அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், தகுதி வாய்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன உறுப்பினர் பதவி வழங்கப்படுகிறது. அதன்படி, ஈரோடு மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நியமன மாமன்ற உறுப்பினராக M. செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக் கொண்டு நியமன உறுப்பினராக (27.11.2025) அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். உடன் துணை ஆணையாளர் கு.தனலட்சுமி உட்பட பலர் உள்ளனர்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கணக்கீட்டுப்படிவங்கள் 73.61% கணக்கெடுப்பு பணி நிறைவடைந்துள்ளது

## மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (27.11.2025) அன்று மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம் 2026-தொடர்பான பணிகள் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. இச்செய்தியாளர் கூட்டத்தில் ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது

தற்போது கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களிடம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் 73.61% சதவீதம் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அதன் விவரங்கள் BLO (App) செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து சட்டமன்ற தொகுதிகளின் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகத்திலும் உதவி மையம் (Help Desk) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும்,இப்படிவத்தைபூர்த்திசெய்வதில்சந்தேகங்கள் ஏதுமிருப்பின் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு படிவத்தில் தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் கைபேசி எண்களில் தொடர்புகொண்டோ அல்லது மாவட்ட உதவி மையம்/ தொகுதி வாரியாக பின்வரும் உதவி மைய எண்களை தொடர்புகொண்டோ தங்களது சந்தேகங்களை தீர்த்துக்கொண்டு தங்களது படிவங்களை முழுமையாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்க சம்மந்தப்பட்ட BLO அல்லது கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். BLA-2 ஆகியோரிடம்

மாவட்ட இலவச தொடர்பு மையம்-1950,
மாவட்ட உதவிமைய எண் (வாட்ஸ் ஆப்)
90425 80535,
98.ஈரோடுகிழக்குசட்டமன்றதொகுதி---04242251618,
99.ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி--0424 2254224,
100.மொடக்குறிச்சிசட்டமன்றதொகுதி--04242500123,
103.பெருந்துறை சட்டமன்ற தொகுதி---04294 220577,
104.பவானி சட்டமன்ற தொகுதி-
04256 230334,
105.அந்தியூர் சட்டமன்ற தொகுதி--04256 260100,
106.கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி--04285 222043,
107. பவானிசாகர் (தனி) சட்டமன்ற தொகுதி - 04295 220383.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா,தேர்தல் வட்டாட்சியர் சங்கர் கணேஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவையில் மூன்று மாத குழந்தை கை, கால்கள் வெட்டப்பட்டு நிலையில் சடலமாக மீட்பு

## குழந்தை நரபலி கொடுக்க பட்டதா என காவல்துறையினர் விசாரணை

கோவையில்,பிறந்துமூன்றுமாதங்களானகுழந்தை கை, கால்கள் வெட்டப்பட்டு உடலை வீசி சென்ற நிலையில் சடலத்தை மீட்ட காவல்துறையினர் குழந்தை நரபலி குடுக்க பட்டதாக என காவல்துறையினர் தீவீர விசாரணை நடத்தி வருகின்றனர்

கோவைபீளமேடு,காளப்பட்டி-கோவில்பாளையம் செல்லும் சாலையில் மாரியம்மன் கோவில் அருகில் பிறந்து முன்று மாதங்களே ஆன குழந்தை இரண்டு கைகளும், இரண்டு கால்களுடன் சேர்ந்து இடுப்பு அளவிற்கு வெட்டப்பட்டு உடல்மட்டும் தனியாக சாலையில் வீசிச்சென்றுள்ளனர்.

இந்தசெயலில்ஈடுபட்டவர்கள்யார்.கள்ளகாதலில் பிறந்த குழந்தையா,

அல்லது கோவில் அருகில் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளதால்யாராவதுகுழந்தையை நரபலி கொடுத்துள்ளார்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. எதுவாக இருந்தாலும் இப்படி ஒரு கொடூரத்தை அரங்கேற்றியவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக சட்டத்தின் முன்பு நிறுத்த வேண்டும் என்பதே அனைவரது கோரிக்கையாகவும் உள்ளது என்பது குறிப்பிட த்தக்கது.



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கார்த்திகை திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான டிச.3ம் தேதி கார்த்திகை தீபத் தினத்தன்று மாலையில் கோயில் வளாகம், பொற்றாமரைக் குளம் முழுவதும் லட்ச தீபம் ஏற்றப்படும்



சுரண்டை சிவகுருநாதபுரம் அரசு மேல்நிலை பள்ளியில் மிதிவண்டி வழங்கும் விழாவில் பழனி நாடார் எம்.எல்.ஏ. கல ந்து கொண்டார்




14வது ஆண்கள் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை போட்டி தொடர் நவ.28 மதுரை ரேஸ்கோர்ஸில் உள்ள புதிய சர்வதேச ஹாக்கி மைதானத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது.



சேலம் மாவட்டம் ஓமலூரில், ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தாரமங்கலம் புறவழிச்சாலையில் ரூ. 2 கோடியே 65 லட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளை சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர்சரவணன்நேரில்பார்வையிட்டுஆய்வுசெய்தார்.சாலையின்தடிமன், மேல்தள சாய்வு மற்றும் சரிவிகித அளவு போன்றவற்றை அவர் ஆய்வு செய்தார். இந்த திட்டம் 2025 26 ஆம் ஆண்டிறகுள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்க வரி விதிப்பையும் தாண்டி வளர்ச்சி கண்ட இந்திய பொருளாதாரம்

2025–26ம்நிதியாண்டின் 2வது காலாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 8.2 சதவீதமாக உள்ளது.முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக இருந்தது. முந்தைய நிதியாண்டின்2வதுகாலாண்டில் பொருளாதார வளர்ச்சி 5.4 சதவீதம் ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு காலாண்டுகளில், தற்போது தான் இந்திய பொருளாதாரம் அதிகபட்ச வளர்ச்சி கண்டுள்ளது. உற்பத்தித்-



துறை(9.1%), கட்டுமானத்துறை(7.2%),தொழில்துறை (8.1 %) , சேவைத்துறை(9.2 %), நிதி, ரியல் எஸ்டேட் ஆகிய துறைகள் (10.2 %) வளர்ச்சி பெற்றுள்ளன. தனியார் துறை நுகர்வும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இந்திய பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி, இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீதம், பரஸ்பர வரியாக 25 சதவீதம் என 50 சதவீத வரியை அதிபர் டிரம்ப் விதித்து இருந்தார். அதையும் தாண்டி இந்த வளர்ச்சியை இந்தியா எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





திருப்பூர் மாவட்டம் மாவட்ட தொழில் மையம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அனைத்து இடங்களிலும் அரசு அதிகாரிகளை சந்தித்து நமது தின தளம் தினசரி நாளிதழை வழங்கினேன்

# சூனாம்பேடு அரசு மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டி சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வழங்கினார்

செங்கல்பட்டு மாவட்டம்செய்யூர்அடுத்தசித்தாமூர் அருகே சூனாம்பேடு ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களின் நலன் கருதி தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்குமாவட்டசெயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு சுமார்

127 மாணவ மாணவியர்களுக்குஇலவசமிதிவண்டி வழங்கினார் முன்னதாக ஒன்றிய செயலாளர்சிற்றரசு வரவேற்புரை ஆற்றினார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர்



ஒன்றிய கவுன்சிலர் பூலோகம் விசிக மாவட்ட செயலாளர் மு.தமிழினி மேனாள் மாவட்ட செயலாளர் சூ.க.ஆதவன் மறுறும் அரசு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் S.இளங்கோவன் உதவி தலைமையாசிரியர் B. ஹேம மாலினி M.மணிகண்டன் R.திலகம் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்

# தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரண கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது

தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மாதாந்திர சாதாரண கூட்டம் கூட்டரங்கில் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் ஆணையர் ப்ரியங்கா, துணைமேயர்ஜெனிட்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பகுதியில் அனைத்து பணிகளும் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. துப்புரவு பணியாளர்களுக்கு 3 வேளையும் உணவு வழங்கும் திட்டம் சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், துப்புரவு பணியாளர்களுக்கு அடுத்த மாதம் 3 வேளையும் உணவுகள் வழங்குவதற்கென்று ரூ.2 கோடியே 55 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களுக்கென்று மாநகராட்சி சம்பந்தப்பட்ட 30 இடங்களில் வழங்குவதுஎன்றுமுடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் 19, 20, 21 ஆகிய 3 நாட்களில் பெய்த கனமழையால் எங்கும் மழைநீர் பெரிய அளவில் தேங்க வில்லை. ஒரு சில இடங்களில் தான் தேங்கியது அதையும் மின்மோட்டார் மூலம் அப்புறப்படுத்தப்பட்டது. கோக்கூர்;;; குளம், புலிபாஞ்சான்குளம்அமைந்துள்ள பகுதி தாழ்வான பகுதி அதனை சரிசெய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 450 காலி மனைகள் உள்ளது அங்கு தான் மழைநீர் தேங்குகிறது. ஜனவரி 10 வரை மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது.வார்டு 16,17,2 ஆகிய பகுதிகள் தான் நீர் தேங்கியுள்ளது. அதனையும் முறைப்படுத்தி மாநகராட்சிபகுதிகளில்கழிவுநீர் வெளியேற்றுவதற்கு 38 பம்பு அறைகளும், 58 மின் மோட்டார்களும் செயல்பாட்டில் இருந்து வருகிறது.ஆதிபாராசக்தி வழியாக நீர் வெளியே செல்வதற்கு வழியில்லை. இதனால் புதிய வழித்தடம் உருவாக்கப்பட்டு எட்டையாபுரம் ரோடு ஹவுசிங் போர்டு வழியாககடலுக்குசெல்லும் வகையில் அமைக்கப்படுகிறது. காட்டாற்று வெள்ளம் கலெக்டர் அலுவலகம் பின்புறம் வழியாக உள்ளே வருவதை தடுக்கப்பட்டுள்ளது.தேவையான இடங்களில் ஜே.சி.பி. மூலம் சில பணிகளை மேற்கொண்டு மழைநீர் வெளியேற்றுவதற்கு வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. கோரம்பள்ளம் குளம் நிறைந்து 12 கி.மீ தூரம் உப்பாற்று ஓடை வழியாக கடலுக்குச் செல்லும் வழித்தடமும்சரியாகஇருப்பதால், பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை, என்று கூறினார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, சுகாதாரம், தெருவிளக்குகள், திடக்கழிவு மேலாண்மை, சாலை, வரிகள், வர்த்தக உரிமம் தொடர்பான புகார்களை சரி செய்வதற்கான காலக்கெடுவை குறிக்கும் மக்கள் சாசனத்தை தயார் செய்து வெளியிட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்ட தீர்மானம் உள்பட 17 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநகராட்சி எதிர்கட்சி தலைவர் வக்கீல் வீரபாகு, கொறடா வக்கீல் மந்திரமூர்த்தி பேசுகையில்: தூத்துக்குடி பகுதியில் பல இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. அதை இந்த மாநகராட்சி முறைப்படுத்தவில்லை என்று சில குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள். அதற்கு மேயர் ஜெகன் பெரியசாமி கூறுகையில்: கடந்த அதிமுக ஆட்சியில் செய்யாத பல பணிகளை திமுக ஆட்சியில் அதுவும் குறிப்பாக மாநகராட்சியில் 45 மாத காலத்தில் நிறைவேற்றிய பணிகள் அதிகம் உண்டு. கடந்த காலத்தில் கனமழை பெய்தால், 40 நாட்கள் வரை மழைநீர் தேங்கிய



பகுதிகள் உண்டுஆனால் தற்போது தொடர்மழை பெய்த பின்பு 2 மணி நேரத்தில் தண்ணீர் வழிந்தோடகிறது. அப்புறப்படுத்தவும் படுகிறது. குறிப்பாக உங்கள் ஆட்சியில் 3 வழிதடங்கள் தான் இருந்தன. ஆனால் திமுக ஆட்சியில் புதிதாக 11 வழிதடங்கள் ஏற்படுத்தியுள்ளோம். அதனால் 80 சதவீதம் பாதிப்பு இல்லாமல் மக்கள் நிம்மதியாக இருக்கின்றனர். இதற்கு மேலே போய் சொல்ல வேண்டுமென்றால், வஉசி கல்லூரி அருகில் உங்கள் ஆட்சியில் நீர் வழித்தடத்தில் பூங்கா உள்ளிட்ட சில பணிகளை செய்தீர்கள். அது தேவையற்று என இருந்ததை மக்கள் பயன்பாட்டிற்கான விளையாட்டு மைதானம்,நல்லஅறிவுதிறனை வளர்க்கும், நூலகம், அமைத்த மக்களுக்கான பணிகளை திமுக ஆட்சியில் செய்துள்ளோம். என்று தெரிவித்தார்.

பின்னர் கவுன்சிர்கள் பலர் தங்களது பகுதிகளில் தேவையான திட்டங்கள் குறித்தும்,நிறைவேற்ற வேண்டி கருத்துக்களை எடுத்துக் கூறி கோரிக்கை மனுக்களையும் வழங்கினார்கள். மேயர் பேசுகையில்: பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 53 பூங்காக்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன. தூய்மை பணியாளர்கள் நிலவரம் குறித்து அதிமுகவினர் விவரம் தெரியாமல் பேச கூடாது. எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த காலத்தில் அரசாரணை பிறப்பிக்கப்பட்டு உங்கள் ஆட்சி காலத்தில் கோவை உள்பட பல மாநகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வந்த அந்த திட்டத்தை தான் தற்போது தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி உள்ளனர். 22 வருடங்களாக அந்த தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருபவர்களுக்கு எங்கள் ஆட்சியில் தான் 3 வேளை உணவு வழங்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளோம். அதிமுக ஆட்சியில் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாமல் இருந்திருப்பார்கள்.இங்கு எந்த கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் கேள்வி கேட்டாலும் அவர்களுக்கான பதில் உடனடியாக வழங்கப்படும்.மழைநீரை பொறுத்தவரை சிலர் குறைபட்டு கொள்கிறார்கள். ஆனால், வார்டு 7, 8 பகுதிகளில் இருப்பவர்கள் இந்த தண்ணீரை எல்லாம் அங்கு வந்து சேருவதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதால் நாம் நிம்மதியாக இருக்கிறோம் என்பதை மறந்து விட வேண்டும். பழைய மின் கம்பத்தில் கடந்த காலத்தில் பெய்த கன மழையால் 4 அடி தண்ணீர் தேங்கினாலும், தெருவிளக்குக்கான மின் சுவிட்சுகள் தாழ்வாக இருந்ததை உயர்த்தி வைக்கப்பட்டுள்ளது. அதுவும் தனிநபர் வசம் அதிகாரம் இருந்து வருகிறது.அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் அவர்களுக்கான ஒப்பந்தம் முடிவு பெற்றதும், அதையும் முறைப்படுத்தி எல்லா பகுதிகளிலும் உயரமான பகுதிகளில் அமைத்து மழைகாலத்திலும் சிரமமின்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.பக்கிள் ஓடை 7 கி.மீ தூரத்திற்கு 5 மீட்டர் அகலப்படுத்தி தூர் வாரப்பட உள்ளன. ஸ்டேட்பாங்க் காலனி வழியாக இஞ்ஞாசியார்புரம் பள்ளிகூடத்திற்கு தினசரி 5000 மாணவ, மாணவியர்கள் சென்று வருகின்றனர். இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான் 4500 சாலைகள் மாநகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது. சிறு, குறு தெருக்களிலும் தேவைக்கேற்ப பேவர் பிளாக் சாலை அமைத்துள்ளோம். அனைத்து பகுதி மக்களின் நலன் கருதி பல திட்டங்கள் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.இனிஅடுத்தாண்டு ஜனவரி மாதம் வரும் அரசு நிதி மாநகராட்சி நிதி மூலம் தொட்ட பணிகளையும், தொடர்ந்து நிறைவு செய்வோம். காலி மனை இருந்த பகுதிகள் ஒரு லட்சம் இருந்த இடத்தின் மதிப்பு தற்போது ரூ.15 லட்சமாக உயர்ந்துள்ளது. இதையெல்லாம் எண்ணி பார்த்து மாநகராட்சியின் சாதனைகளை எதிர்கட்சியினர் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். கடற்கரை பகுதியில் பாதாள சாக்கடைக்குள் அதிகளவு மண் இருப்பதால் அதை முறைப்படுத்தி விரைவில் சீரமைக்கப்படும். அனைவருடைய கோரிக்கையும் முழுமையாக நிறைவேற்றி கொடுப்பது தான் மாநகராட்சியின் கடமை என்று நாங்கள் பணியாற்றி வருகிறோம்,என்றுபேசினார். கூட்டத்தில், மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி,நிர்மல்ராஜ், கலைச்செல்வி, அன்னலெட்சுமி, மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ்குமார், இசக்கிராஜா, அதிஷ்டமணி, சரவணக்குமார், பொன்னப்பன், சரண்யா, ஜான்சிராணி, சந்திரபோஸ், ராமகிருஷ்ணன் உள்பட மாநகராட்சி அலுவலர்கள், மேயர் நேர்முக உதவியாளர் ரமேஷ், ஜேஸ்பர் மற்றும் மாமன்ற உறுப்பினர் பலர் கலந்து கொண்டனர்.

DHINATH DHALAM Morning Tamil Daily 29.11.2025

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி, கோபி அரசு கலை, அறிவியல் கல்லூரியில் சட்டமன்ற தேர்தல் 2026 க்கான வாக்கு எண்ணும் மையத்தியங்களில் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு



ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரி, கோபி அரசு கலை மற்றும்அறிவியல்கல்லூரியில் நேற்று (28.11.2025) மாவட்டதேர்தல்அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சட்டமன்ற தேர்தல் 2026-க்கான வாக்கு எண்ணும் மையத்தியங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஈரோடு மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல் 2026-ஐ முன்னிட்டு பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து நேற்று (28.11.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் ஈரோடு (மேற்கு), ஈரோடு (கிழக்கு), மொடக்குறிச்சி, பெருந்துறை, பவானி, அந்தியூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும், கோபி அரசு கலை மற்றும்அறிவியல்கல்லூரியில் கோபிச்செட்டிபாளையம் மற்றும் பவானிசாகர் ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகளுக்கும், வாக்கு எண்ணும் மையம் அமைப்பதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் குறித்தும் வாக்குப் பெட்டிகள் இருப்பறை,வாக்கு எண்ணும் மையத்தில் அலுவலர்களுக்கான அறை வசதி, தேர்தல் முகவர்களுக்கு தேவையான அறை வசதிகள் குறித்தும் மற்றும் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்சாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து குறித்தும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரத்துல்லா உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## டித்வா புயல் எதிரொலி: ராமேசுவரத்தில் சூறைக்காற்றில் சிக்கி விசைப்படகு சேதம்



ராமேசுவரம்: டித்வா புயலினால் ஏற்பட்ட சூறைக்காற்றினால் ராமேசுவரம் கடலில் நிறுத்தி வைத்திருந்த விசைப்படகு தரை தட்டி சேதமடைந்தது.


தென்மேற்கு வங்கக்கடல் அதை ஒட்டிய இலங்கை கடற்கரையில் நிலவிய டித்வா புயல் வடக்கு - வடமேற்கு நோக்கி நகர்ந்து, புதுச்சேரிக்கு தென்கிழக்கே 430 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு தெற்கே 530 கி.மீ தொலைவிலும் மையம்கொண்டுள்ளது.

இதன் காரணமாக, நாளை வடதமிழகம் கடலோர பகுதிகளில் 9 முதல் 12 அடி வரை அலைகள் உயரமாகவும், சீற்றத்துடனும் காணப்படும். காற்று மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேலும் ஓரிரு இடங்களில் அதீத கன மழைக்கு வாய்ப்புள்ளது, என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.

முன்னதாக மீன்வளத்துறை அதிகாரிகள் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்திருந்ததால், மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடற்பகுதிகளில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் ஐந்தாவது நாளாக கடலுக்குச் செல்லவில்லை. மேலும், பாம்பனில் நான்காம் எண் புயல் கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

டித்வா புயல் காரணமாக ராமேசுவரம் கடலோரப் பகுதிகளில் வியாழக்கிழமை நள்ளிரவு வீசிய சூறைக்காற்று மற்றும் கடல் சீற்றம் காரணமாகராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி விசைப்படகு ஒன்று நங்கூரம் அறுந்து சேராம்கோட்டை கடற்பகுதியில் தரை தட்டி நின்றது.

வெள்ளிக்கிழமை காலை 6 மணி நிலவரப்படி தங்கச்சிமடத்தில் 16.60 மி.மீ, பாம்பனில் 13.70 மி.மீ.,, மண்டபம் 11.70 மி.மீ, ராமேசுவரம் 09.00 மி.மீ, மழையும் பதிவானது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பரிக்கல் கிராமத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவி குழுவைச் சேர்ந்த பெண்கள் தயார் செய்த கைவினைப் பொருட்கள் விற்கப்படும் மதி அங்காடி அமைக்கப்பட்டது இதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் கலந்து கொண்டு மதி அங்காடியை திறந்து வைத்தார் இதில் அரசு அதிகாரிகள் மகளிர் சுய உதவி குழு பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்...



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மதுவிலக்கு போலீசாரால் கடந்த சில மாதங்களாக உளுந்தூர்பேட்டை பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் கள்ளத்தனமாக விற்கப்பட்ட மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்தனர் இதில் ரூபாய் 10 லட்சத்து 80 ஆயிரம் மதிப்புள்ள 7,200 மதுபாட்டில்கள் காலாவதி ஆன நிலையில் அதனை அழிக்க உளுந்தூர்பேட்டை குற்றவியல் நீதிபதி உத்தரவிட்டார் இந்த நிலையில் கலால் தனி வட்டாட்சியர் விஜய பிரபாகரன் மற்றும் மதுவிலக்கு போலீசார் வருவாய் துறையினர் நீதிமன்ற ஊழியர்கள் என அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் இன்று காலை 7, 200 மது பாட்டில்களை உளுந்தூர் பேட்டை கீரனூர் பெரிய ஏரியில் பள்ளம் தோண்டி மதுபானங்களை ஊற்றி அளித்தனர்...

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான மூன்றாவது சிறப்பு கல்விக் கடன் முகாமில் 49 மாணவர்களுக்கு ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலான கல்விக்கடனுதவிகான ஆணைகளை வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நேற்று (28.11.2025) கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக நடைபெற்ற மூன்றாவது சிறப்பு கல்விக் கடன் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 49 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலான கல்விக்கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

பள்ளிக்கல்வியை ஊக்குவிப்பதற்காக பல்வேறு தமிழ்நாடு அரசு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக 6 வகுப்பு முதல் 12 வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் படிக்கும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. கல்விக்கடன் வழங்குவதன் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தி தருகிறது. மாணவர்கள் கல்வி கடன் என்பது கடன் அல்ல. வருங்கால முதலீடு ஆகவே எந்த தயக்கமும் இன்றி வங்கிகள் கடன் வழங்க வேண்டும்.

மேலும் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வித்யாலட்சுமி இணைய தளம் மூலம் விண்ணப்பிக்க உதவி செய்ய வேண்டி வலியுறுத்தினார். கல்வி கடன் முகாம்நடத்துவதுமூலம் இந்த ஆண்டு இலக்கான ரூ.75 கோடிகள் எட்டப்பட வேண்டும். தற்போது இலக்கான ரூ.75 கோடியை தாண்டி சுமார் 98 கோடி அளவிற்கு இலக்கு எட்டப்பட்டுள்ளது, இந்த நிகழ்ச்சியில் கல்வி கடன் புதிதாக விண்ணப்பிக்க மாணவர்களுக்கு விண்ணப்பிக்க உதவியும் செய்யப்பட்டது என தெரிவித்தார்.

இம்முகாமில் கல்விக்கடன் வழிகாட்டி திரு. அன்பரசு அவர்கள் கல்விகடன் எவ்வாறு மாணவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது என எடுத்துரைத்தார். இந்த முகாமில் 49 மாணவ மாணவியர்களுக்கு கல்விகடன் ரு 2.5 கோடி அளவுக்கு ஒப்புகை கடிதம் வழங்க பட்டது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள வங்கிகள் மூலம் இந்த நிதி ஆண்டு ஆரம்பம் முதல் இன்று வரை சுமார் 1300 மாணவர்களுக்கு 98 கோடி அளவுக்கு கல்வி கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வங்கியாளர்கள்,மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என 200-கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விவேகானந்தன். ஈரோடு கனரா வங்கி வட்டார மேலாளர் பவித்திரன், மாவட்ட முன்னோடி வங்கிமுதுநிலைமேலாளர் எஸ்.சாயிக்கண்ணன், வங்கியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (28.11.2025) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மாபெரும் கல்விக் கடன் முகாமில் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விவேகானந்தன் உட்பட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடி மாநகராட்சியில் மாதாந்திர சாதாரண கூட்டத்தில் அதிமுக சார்பாக கவுன்சிலர் மந்திரமூர்த்தி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்



தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் 1702 தூய்மைப் பணியாளர்களுக்கு 26 இடங்களில் 3வேளை இலவச உணவு வழங்குவதற்காக 3 ஆண்டுகளுக்கு ரூ.8கோடியே 14லட்சத்து 586 நிதி ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர் மந்திரமூர்த்தி பேசுகையில்: தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை பணி நிரந்தரம் என்பதே அவர்களது கோரிக்கையாக உள்ளது. ஆகவே சட்டப்படி அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்தால் போதும் உணவு வழங்க வேண்டியது இல்லை மேலும் கடந்த முறை மழையினால் தண்ணீர் எங்கும் தேங்காது என்று சொன்னீர்கள் ஆனால் மனதார பகுதியில் அங்கே தண்ணீர் தேங்கி உள்ளது குறிப்பாக நீதிமன்ற வளாக பகுதியில் தண்ணீர் தேங்கி இருக்கிறது அது மட்டுமில்லாமல் சீனாவானா அரசு மேல்நிலைப் பள்ளியில் தண்ணீர் தேங்கியுள்ளது கடந்த முறை எங்கெல்லாம் தண்ணீர் தேங்கியுள்ளதோ அதே போல் இப்போதும் அதே பகுதியில் தேங்கியுள்ளது இதற்கும் நிரந்தர தீர்வு வேண்டும் மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் தூத்துக்குடியில் திறந்து வைப்பதற்காக அரசு சார்பாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சொன்னீர்கள் ஆனால் தற்போது தூத்துக்குடி மாநகர மக்களுக்கு எந்தவிதமான மருத்துவ சிகிச்சை கிடைக்கக்கூடாது என்று நினைக்கிறீர்களா

என்று அதிமுக சார்பாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம் என்று அதிமுக எதிர்க்கட்சி கொறடாவும் 51வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் மந்தரமூர்த்தி தெரிவித்தார்.



தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரண கூட்டத்தில் மாநில அளவில் சிறந்த நூலக ஆர்வலருக்கான விருது விழாவில் தூத்துக்குடி மாநகராட்சி 34வது கவுன்சிலர் சந்திரபோஸ்க்கு நூலகம் அமைத்துக் கொடுத்ததற்கு தேர்வு செய்யப்பட்டு விருதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விருது வாங்கியதற்கு மேயர் ஜெகன் பெரியசாமி சால்வை அணிவித்து பாராட்டினார். தொடர்ந்து அனைத்தும் மாமன்ற உறுப்பினர்கள் கவுன்சிலர்கள் சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.